**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம்**
**ஆத்தூர்**
**------**
**அசல் வழக்கு எண்.100/2021**

**2026 ஆம்** வருடம் பிப்ரவரி மாதம் 18 ஆம் நாள் பிரதிவாதி தரப்பு சாட்சியான பி.வா.சா.1-இன் வாக்குமூலம் 1873 ம் வருடத்திய 10 வது விதியின் படி ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | ஜோசப் ஜான் பிரிட்டோ | ஜாதி | : | |
| த.பெ | : | மரியசூசை | தொழில் | : | விவசாய கூலி வேலை |
| கிராமம் | : | பஞ்சம்பட்டி | சமயம் | : | |
| தாலுகா | : | ஆத்தூர் | வயது | : | 57/2026 |
| தேதி | : | 18.02.2026 | | | |

## 2ம் வாதி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி

இந்த வழக்கில் ஜெர்மனின் சட்டபூர்வமான அனைத்து வாரிசுகளையும் தரப்பினர்களாக சேர்த்துள்ளார்கள் என்றால் சரிதான். உங்களுடைய எதிர் வழக்குரையில் வா.சா.ஆ.1 உயில் ஆவணத்தை ஜெர்மன் எழுதிவைக்கவில்லை என்று கூறியுள்ளீர்கள் என்றால் சரிதான். இந்த வழக்கில் உங்களுடைய பிரமாண வாக்குமூலத்துடன் எந்த ஆவணத்தையும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். அசல் வழக்கு எண். 2 /2021 வழக்கின் பி.வா.சா.ஆ.4 ஆவணமான முசலிக்காவில் ஜெர்மனுக்கு வழங்கப்பட்ட A அட்டவணை சொத்துக்கள் ஜெர்மன் இறந்துவிட்டாலோ அல்லது திருமணம் செய்து கொண்டாலோ அந்தோணி மற்றும் மரியசூசை வாரிசுகளுக்கு சேரவேண்டும் என்ற சரத்து உள்ளதால் ஜெர்மன் அவர்கள் அந்த சொத்துக்களை பொருத்து உயில் ஆவணம் எழுதி வைக்க உரிமை இல்லை என்று கூறுகிறீர்கள் என்றால் சரிதான். உங்களுடைய பிரமாண வாக்குமூலத்தில் மேற்படி உயிலானது உற்பத்தி செய்யப்பட்டது என்று கூறியுள்ளீர்கள் என்றால் சரிதான். ஜெர்மன் மேற்படி உயிலை எழுதி வைக்கவே இல்லை என்று கட்சி செய்கிறீர்களா அல்லது ஜெர்மன் எழுதி வைத்த உயில் சட்டப்படி செல்லாது என்று கட்சி செய்கிறீர்களா என்றால் எழுதி வைத்த உயில் சட்டப்படி செல்லாது என்று கட்சி செய்கிறேன். உங்களிடம் காட்டப்படும் வா.சா.ஆ-1 ஆவணத்தில் 5ம் பக்கத்தில் உள்ள புகைப்படம் உங்கள் அத்தை ஜெர்மனுடையது என்றால் சரிதான். வா.சா.ஆ-1ன் 4ம் பக்கத்தில் O.S. No. 870/2006ஐ நான் தாக்கல் செய்து நிலுவையில் உள்ளது என்றும், அதில் A அட்டவணை சொத்தோ அல்லது அதற்கு பதில் நீதிமன்றம் வழங்கும் வேறு

சொத்துக்களையோ ஜெரால்டு அனுபவித்து கொள்ளவேண்டியது என்று எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ-1 ஆவணத்தில் உள்ள சாட்சிகளில் ஒருவரும் அதில் கையொப்பம் செய்த நோட்டரி பப்ளிக்கையும் இந்த வழக்கில் சாட்சிகளாக விசாரிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.1 ஆவணம் செல்லாது என்பதற்காக நீங்கள் எந்த ஆவணத்தையும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. அசல் வழக்கு எண். 2/2021ல் ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேன். உங்களிடம் காட்டப்படும் வா.சா.ஆ-7ல் ஜெர்மனின் விலாசம் பிளாட் நம்பர். 9, முல்லை தெரு, LIC காலணி, சாந்தி நகர், மதுரை-18 என்று உள்ளது என்றால் சரிதான். ஜெர்மன் 01.04.2012ல் வேளாங்கண்ணியில் இறந்தபிறகு அவரது உடல் இந்த வழக்கின் அவரது சகோதரியான 12ம் பிரதிவாதியின் மகள் 15ம் பிரதிவாதி தாவா சொத்தில் கட்டியுள்ள வீட்டில் வைத்து கத்தோலிக்க கிறிஸ்தவ மத சம்பரதாயப்படி ஜெரால்டால் ஈமசடங்குகள் செய்யப்பட்டு தனிக்கல்லறையில் அடக்கம் செய்யப்பட்டது என்றால் சரியல்ல.

**Sd/-Thiru.S.Anbuthasan**
District Munsif cum Judicial Magistrate
Athoor